|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | | | | | | | | |

## F O R M ' VII '

***(See rule 15)***

## Application for obtaining certified copy / Certified extract

Date:

From: (Name and address of the person(s))

To,
The Registrar of Marriages,

Sub: Certified copy / Certified extract

Sir,

I, the undersigned, request you that—

(1) _______ (please write the number) certified copy / Certified extract of the following document(s) may please be provided to me at the earliest.

* (a) a memorandum of marriage
* (b) a certificate of registration of a marriage
* (c) an order of refusal for registration of a marriage
* (d) the extract of the register of marriages

(2) The Particulars of Marriage—

(i) Name of the husband_____________________

(ii) Name of the wife_________________________

(iii) Date of registration of marriage__________________

(iv) Date and no. of a certificate of registration of marriage
________________________________

(v) Date and no. of an order of refusal for registration of a marriage___________________________

(3) The fees of Rs.______( rupees_________________________) is enclosed herewith.

Place:: Yours faithfully,

Date: :

**Strike out which is not applicable.*

# விதிகள்

1. **குறுந்தலைப்பு:-** இவ்விதிகள், தமிழ் நாடு 2009 ஆம் ஆண்டு திருமணங்கள் பதிவு விதிகள் என்று அழைக்கப்படும்.

2. **பொருள் விளக்கங்கள்:-** (1)இவ்விதிகள் சந்தர்ப்பம் வேறு விதமாக பொருள் குறித்தாலன்றி, மற்றப்படி

   a) 'சட்டம்' என்பது தமிழ் நாடு 2009 ஆம் ஆண்டு திருமணங்கள் பதிவுச் சட்டம் என்று பொருள்படும்.

   b) 'படிவம்' என்பது இவ்விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் என்று பொருள்படும்.

   c) 'சாட்சி' என்பது திருமணம் நடைபெற்ற சமயத்தில் அங்கிருந்த யாதொரு நபர் என்று பொருள்படும்.

   d) "பதிவேடு" என்பது பதிவாளர் வைத்துவரும் திருமணங்கள் பதிவேடு என்று பொருள்படும்.

   (2) இவ்விதிகளில் பயன்படுத்தப்பட்டு ஆனால் பொருள் விளக்கம் அளிக்கப்படாத சொற்கள் மற்றும் சொற்றொடர்கள், சட்டத்தில் அவற்றுக்கு அளிக்கப்பட்ட அதே பொருளை கொண்டிருக்கும்.

3. **மாவட்ட பதிவாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் :-** மாவட்ட பதிவாளர்,

   (a) பதிவாளர் அனுப்பும் திருமணங்கள் பதிவுக்கான குறிப்பாவணங்களின் இரண்டாம் நகலை கோப்பில் வைத்து, வரையறுக்கப்பட்ட முறையில் பேணி வர வேண்டும்.

(b) திருமண பதிவேட்டின் சான்றளிக்கப்பட்ட பதிவு நகல்கள், திருமணங்கள் பதிவுச் சான்றிதழ் மற்றும் அவரால் பிறப்பிக்கப்பட்ட அனைத்து ஆணைகளை விண்ணப்பத்தாருக்கு அளிக்க வேண்டும்.

(c) இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், அவர் முன் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடு குறித்து தக்க ஆணைகளை பிறப்பிக்க வேண்டும்.

4. <u>பதிவாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்:-</u> பதிவாளர்,

a) திருமணங்கள் பதிவிற்கான குறிப்பாவணத்தை சரிபார்க்க வேண்டும்,

b) மணமகன், மணமகள் மற்றும் சாட்சிகளை உறுதி செய்யவேண்டும்.

c) திருமண பதிவுச் சான்றிதழை வழங்க வேண்டும்.

d) திருமணத்தை பதிவு செய்வதற்கான மறுப்பாணையின் ஒரு நகலை மாவட்ட பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்.

e) திருமண குறிப்பாவணத்தின் ஒரு நகலை மாவட்ட பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்.

f) திருமண பதிவேட்டின் சான்றளிக்கப்பட்ட பதிவு நகல்கள், திருமணங்கள் பதிவுச் சான்றிதழ் மற்றும் அவரால் பிறப்பிக்கப்பட்ட அனைத்து ஆணைகளை விண்ணப்பத்தாருக்கு அளிக்க வேண்டும்.

5. <u>திருமணத்தை பதிவு செய்வதற்கான நடைமுறை:-</u>(1) (a) திருமணத்தை பதிவு செய்வதற்கான குறிப்பாவணம் ஒவ்வொன்றும் படிவம்–I இல் இருக்க வேண்டும். இதனை, திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து 90 நாட்களுக்குள் படிவம் II இல் ஒரு விண்ணப்பத்துடன் பதிவாளரிடம் நேரில் சென்று அளிக்க வேண்டும் அல்லது அனுப்ப வேண்டும். படிவம்–I மணமக்களுக்கு பதிவாளரால் இலவசமாக வழங்கப்படும்.

(b) படிவம்–I இல் திருமண பதிவுக்கான குறிப்பாவணத்துடன் படிவம் –II இல் விண்ணப்பத்தை பெற்றுகொண்டதற்கான ஒப்புகையை பதிவாளர் அளிப்பார்.

(2) திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து 90 நாட்களுக்குள் குறிப்பாவணம் அனுப்பப்பட்டால், குறிப்பாவணம் இரு நகல்களில் அளிக்கப்படவேண்டும். இதில், மணமக்கள், திருமணத்தை நடத்துபவர், இரு சாட்சிகள் ஆகியோர் கையொப்பமிட்டு, ரூ.100/– கட்டணத்துடன் (ரூபாய் நூறு மட்டும்) அனுப்ப வேண்டும்.

(3) திருமணப் பதிவுக்கான குறிப்பாவணம் திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து 90 நாட்களுக்குள் அளிக்கப்படாவிட்டால் அல்லது அனுப்பப்படாவிட்டால் மணமக்கள் 90 நாட்கள் கால அளவு முடிவடைந்தப் பின்னர், மேற்கொண்டும் 60 நாள் கால அளவுக்குள் ரூ.150/– கட்டணத்துடன் (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்) குறிப்பாவணத்தை அளிக்கலாம் அல்லது அனுப்பலாம்.

(4) குறிப்பாவணத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைத்து அனுப்பப்படவேண்டும். அவையாவன:–

(a) (i) இந்திய தேர்தல் ஆணையம் வழங்கிய வாக்காளர் அடையாள அட்டையின் நகல் அல்லது

(ii) கடவுச் சீட்டின் நகல்; அல்லது

(iii) வருமான வரி துறை வழங்கிய PAN/GIR அட்டையின் நகல்; அல்லது.

(iv) குடும்ப அட்டையின் நகல்; அல்லது

(v) அரசு அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது உள்ளாட்சி மன்றங்கள் வழங்கிய புகைப்பட அடையாள அட்டையின் நகல்; அல்லது

(vi) வங்கிகள் அல்லது அஞ்சல் அலுவலகங்கள் வழங்கிய பற்று வரவுச் சிட்டை (Pass book) நகல் (புகைப்படத்துடன்), அல்லது,

(vii) ஓய்வூதிய புத்தகத்தின் நகல்; அல்லது,

(viii) உடல் ஊனமுற்றோர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் நகல்; அல்லது

(ix) துப்பாக்கி உரிம நகல்; அல்லது,

(x) "சுதந்திர போராட்ட வீரர்களுக்கு" வழங்கிய அடையாள அட்டை நகல்;

மணமக்களுக்கும், சாட்சியளிக்கும் தகுதி வாய்ந்த அதிகாரி வழங்கிய,

(b) (i) பிறப்புச் சான்றிதழின் நகல்; அல்லது

(ii) பள்ளி/கல்லூரியை விட்டுச் செல்லும்போது அளிக்கப்படும் சான்றிதழ்; அல்லது,

(iii) மணமக்களின் வயதை உறுதிப்படுத்தும் ஆதாரம்; மற்றும்

(C) திருமண அழைப்பிதழ் அல்லது திருமணம் நடைபெறும் இடத்தை குறிப்பிடும் ஏனைய ஆதாரம்

(5) குறிப்பாவணம் வரப்பெற்றவுடன், பதிவாளர் அதனை ஆய்வு செய்ய வேண்டும் அவ்வாறு ஆய்வு செய்யும் போது, குறிப்பாவணத்தில் குறைபாடு உள்ளது அல்லது போதுமான தகவல்கள் அளிக்கப்படவில்லை அல்லது ரூ.100/– கட்டணம் இணைத்தனுப்பப்படவில்லை அல்லது ஆய்வுக்கு தேவைப்படும் ஆவணங்கள் இணைத்தனுப்பப்படவில்லை என்று கண்டறியப்பட்டால் குறைகளை சரிசெய்வதற்காக மணமக்களுக்கு அவற்றை திருப்பி அனுப்ப வேண்டும். அவர்கள், அக்குறிப்பாணையை பெற்ற நாளிலிருந்து 7 நாட்களுக்குள் அதனை சரிசெய்து திருப்பி அனுப்ப வேண்டும்.

(6) குறிப்பாவணத்தை சரிபார்த்து, தரப்பினர்கள் மற்றும் சாட்சிகளின் அங்க அடையாளம் குறித்து மனநிறைவடைந்தப்பின்னர், பதிவாளர் கீழே அளிக்கப்பட்டுள்ள தொடர் எண்ணிடப்பட்ட விவரம் நிரப்பப்படாத வெற்றிடம் கொண்ட படிவத்திலுள்ள குறிப்பாவண கோப்பில் குறிப்பாணையை வைக்கவேண்டும்.:-

| |
|---|
| தமிழ்நாடு 2009 ஆம் ஆண்டு திருமணங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் வைத்து வரப்பட்ட திருமணங்கள் குறித்த குறிப்பாவண கோப்பு ---------------- தொகுதியில் ---------- பக்கத்தில் -------------/ 20 ஆம் ----------- தொடர் எண்ணில் இந்த குறிப்பாவணம் வைக்கப்படுகிறது,<br>---------ஆண்டு -----------திங்கள்-----------நாள்<br>திருமணப் பதிவாளரின் கையொப்பம் |

(7) திருமணப்பதிவாளர், (6) ஆம் துணை விதியில் கருதப்பட்டுள்ளவாறு குறிப்பாவணத்தை வைத்தப்பின்னர் மின்னணு சேமிப்பு சாதனத்தில் குறிப்பாவணத்தை நுண்ணாய்வு செய்யும் படி செய்து, விண்ணப்பத்துடன் குறிப்பாவணத்தை வைப்பதன் பேரில், பதிவாளர் திருமணத்தை பதிவு செய்து திருமணப்பதிவு குறித்த சான்றிதழ் ஒன்றை படிவம் III–இல் அளிக்கவேண்டும். இந்த சான்றிதழை தரப்பினர்களிடம் நேரில் அல்லது தரப்பினர்கள் அளித்த சுயமுகவரி கொண்ட அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட உறையில் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

(8) தரப்பினர்களின் அல்லது சாட்சிகளின் அங்க அடையாளம் குறித்து அல்லது குறிப்பாவணத்தில் அளிக்கப்பட்ட விவரங்களின் உண்மைத்தன்மை குறித்து பதிவாளர் மனநிறைவடையாத நேர்வில், பதிவாளர், தரப்பினர்களிடம் விசாரணை செய்து எழுத்து மூலமாக காரணங்களை பதிவு செய்த பின்னர் படிவம் IV–இல் திருமணத்தை பதிவு செய்ய மறுத்து ஆணையிடுவார். இதன் நகல் ஒன்றினை மாவட்ட பதிவாளருக்கு அனுப்பிவைப்பார்.

6. <u>மாவட்ட பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டிய இருபடிகள் :</u> (1) பதிவாளர், முந்தைய மாதத்தில் அவர்பெற்றுக் கொண்ட அனைத்து குறிப்பாவணத்தின் இருபடிகளையும், அத்தகைய கடைசி படியில் பின்வரும் சான்றிதழ் ஒன்றை இணைத்தும் ஒவ்வொரு மாதத்தின் 5 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் மாவட்ட பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்.

> தொடர் எண்----முதல் தொடர் எண்----- வரையிலான குறிப்பாவணங்கள், ------மாதத்தில், தமிழ் நாடு 2009 ஆம் ஆண்டு திருமணங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் என்னால் வைத்து வரப்பட்ட குறிப்பாவணம் குறித்த கோப்பில் வைக்கப்பட்ட அனைத்து குறிப்பாவணங்களின் நகல்கள் எனச் சான்றளிக்கப்படுகிறது.
>
> --------ஆண்டு--------திங்கள்-------நாள்.
>
> திருமணப்பதிவாளரின் கையொப்பம்

(2) மாவட்ட பதிவாளர், குறிப்பாவணத்தின் இருபடிகளை பெற்ற பின்னர், பதிவாளர்கள் வைத்து வந்ததைப் போன்ற பதிவேடுகளில் அவற்றை வைக்க வேண்டும்.

7. **இரசீது படிவம்:-** பதிவாளர், அவர் பெற்றுக் கொண்ட கட்டணங்களுக்காக பின்வரும் படிவத்தில் இரசீது ஒன்றை அளிக்க வேண்டும். இந்த இரசீது, கணினி வாயிலாக இருபடிகளில் அளிக்கப்படவேண்டும். இந்த இரசீது, தொடர்ச்சியாக பின்னனு முறையில் இலக்கிடப்பட்டிருக்கவேண்டும்.

இரசீது

(தமிழ் நாடு 2009 ஆம் ஆண்டு திருமணங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ்)

எண்......................................

திருமணப் பதிவாளர் அலுவலகம்,

.............................................(இடம்)

திரு/திருமதி...........................................................என்பவரிடமிருந்து

(குறிப்பாவணம் எண்.............) கீழ்க்காணும் வகைகளுக்காக, கட்டணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

| தொடர் எண். | இனம் | (ரூ.) |
|---|---|---|
| i) | திருமணகுறிப்பாணையை பதிவு செய்வதற்கு | |
| (ii) | பதிவேட்டிலிருந்து சான்றளிக்கப்பட்ட பகுதி நகல்கள் வழங்குவதற்கு | |
| (iii) | சான்றளிக்கப்பட்ட நகல்/-------- நகல்கள் வழங்குவதற்கு | |
| (iv) | ஏனையவற்றிற்கு | |
| | மொத்தம் | |

ரூபாய் எழுத்தால்; ரூபாய்------------------------------------------------------------

--------------ஆண்டு----------திங்கள்------------நாள்.

திருமணப் பதிவாளரின் கையொப்பம்.

8. <u>அலுவலகத்தில் தவறுதலாக பெறப்பட்ட குறிப்பாவணங்களை அனுப்பி வைத்தல்:-</u>

(1) பதிவாளர், அவருடைய அதிகார வரம்பிற்குள் வராத குறிப்பாவணத்தை பெறுவாராயின் அத்தகைய அதிகார வரம்புடைய பதிவாளருக்கு அதனை அவர் அனுப்பிவைக்க வேண்டும். இது குறித்து குறிப்பாவணம் அனுப்பிய/வழங்கிய நபர்களுக்கு அவர் தெரிவிக்க வேண்டும்.

(2) பதிவாளர் தன்னுடைய அதிகார வரம்பின் கீழ் வராத அத்தகைய குறிப்பாணையைப் பெற்று கவனக்குறைவாக அவர் வைத்துவரும் பதிவேட்டில் அதனை வைத்துவிட்டாராயின், அந்த குறிப்பாவணம் எந்த பதிவாளரின் அதிகார வரம்பின் கீழ் வருகிறதோ, அந்த பதிவாளர் கோப்பில் வைப்பதற்காக, கோப்பில் வைக்குமாறு அவர் மேற்குறிப்பெழுதிய நகலுடன் குறிப்பாவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகலை அவர் அனுப்பவேண்டும். இது குறித்து குறிப்பாவணம் அனுப்பிய / வழங்கிய நபர்களுக்கு அவர் தெரிவிக்க வேண்டும். அவர் எடுத்த நடவடிக்கை குறித்தும், அவருடைய பதிவேட்டிலிருந்து பதிவினை ரத்து செய்வதற்கும், குறிப்பாவணம் குறித்து அவர் தகுந்த மேற்குறிப்பு எழுத வேண்டும்.

(3) பதிவாளர் குறிப்பாணையின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்றினை பெற்றுக் கொண்டதன் பேரில் (1) மற்றும் (2) துணை விதிகளின் கீழ் யாதொரு கூடுதல் கட்டணம் விதிக்காமல் அவர் வைத்து வந்த பதிவேட்டில் அதனை வைத்துக் கொள்ள வேண்டும். நடைமுறையினை பின்பற்றி திருமணத்தை பதிவு செய்வதுடன் அவர் எடுத்த நடவடிக்கை குறித்து மாவட்ட பதிவாளருக்கு தெரிவிக்க வேண்டும்.

9. <u>திருமணங்கள் குறித்த பதிவேட்டிலும் பதிவுச்சான்றிதழிலும் திருத்தம்:-</u> திருமணங்கள் குறித்த பதிவேட்டில் அல்லது பதிவுச்சான்றிதழில் செய்யப்படும் திருத்தம் சரியானதா என்பதை ஐயமுறத் தெளிந்த பின்னர், முதலில் செய்த பதிவில் யாதொரு திருத்தமும் செய்யாமல், அடிக்குறிப்பு ஒன்றின் மூலம் திருமணங்கள் குறித்த பதிவேட்டில் அல்லது பதிவுச்சான்றிதழில், பதிவாளர், யாதொரு திருத்தம் செய்ய வேண்டும் அல்லது விடுபாட்டை அல்லது தவறை சரிசெய்ய வேண்டும் அதில், அவர், தேதியுடன் கூடிய கையொப்பமிட வேண்டும்.

10. <u>மேல் முறையீடுகள்:-</u> (1) மேற்சொன்ன சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ், திருமணத்தைப் பதிவு செய்ய மறுத்த பதிவாளரின் ஆணைக்கு எதிராக, அத்தகைய ஆணை வரப்பெற்ற நாளிலிருந்து முப்பது நாட்கள் காலஅளவிற்குள், அந்த ஆணையின் நகல் மற்றும், 5 ஆம் விதியைச் சேர்ந்த (4) துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான ஆவணங்களுடன், மேற்சொன்ன சட்டத்தின் 8 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் மாவட்டப்பதிவாளரிடம் மேல் முறையீடு ஒன்றை அளிக்கலாம்.

(2) பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய தரப்பினை எடுத்துக் கூறுவதற்கு ஒரு வாய்ப்பளித்து, காரணங்களை, எழுத்து மூலமாகப் பதிவு செய்த பின்னர், நேர்விற்கேற்ப, திருமணத்தைப் பதிவு செய்யுமாறு அல்லது பதிவாளரின் ஆணையை உறுதி செய்யுமாறு, பதிவாளருக்கு மாவட்டப்பதிவாளர், ஆணை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

(3) மேற்சொன்ன சட்டத்தின் 8 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ் திருமணத்தைப் பதிவு செய்ய மறுத்த மாவட்டப் பதிவாளரின் ஆணைக்கு எதிராக, அத்தகைய ஆணை வரப்பெற்ற நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், அந்த ஆணையின் நகல் மற்றும் 5 ஆம் விதியைச் சேர்ந்த

(4) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான ஆவணங்களுடன், மேற்சொன்ன சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், தலைமைப்பதிவாளரிடம், மேல் முறையீடு ஒன்றை அளிக்கலாம்.

(4) பாதிக்கப்பட்டவர்கள், தங்களுடைய தரப்பினை எடுத்துக் கூறுவதற்கு ஒரு வாய்ப்பளித்து காரணங்களை, எழுத்து மூலமாகப் பதிவு செய்த பின்னர், நேர்விற்கேற்ப, திருமணத்தைப் பதிவு செய்யுமாறு அல்லது மாவட்டப் பதிவாளரின் ஆணையை உறுதிசெய்யுமாறு, தலைமைப் பதிவாளர், ஆணை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

11. <u>திருமணங்களைப் பதிவு செய்வதற்கான படிவம் மற்றும் அதைப் பராமரிக்கும் முறை:-</u> (1) பதிவாளர், திருமணங்களைப் பதிவு செய்வதற்கான பதிவேடு ஒன்றை, ஒவ்வோராண்டும் படிவம் V–ல் வைத்து வர வேண்டும். திருமணத்தைப் பதிவு செய்ய மறுப்பது தொடர்பான தகவல், தனியே, பதிவேடு ஒன்றில், படிவம் VI–ல் வைத்து வரப்பட வேண்டும்.

(2) பதிவாளர், வெற்றுப் பதிவேட்டில் உண்மையில் அடங்கியுள்ள பக்கங்களின் எண்ணிக்கை, அந்தப் பதிவேடு அவருக்கு வரப்பெற்ற நாள், அவர் பதிவு செய்யத் தொடங்கிய நாள் ஆகியவற்றை அவருக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு வெற்றுப் பதிவேட்டின் முதல் பக்கத்தில் குறிப்பிட்டு, அவருடைய கையொப்பத்துடன் சான்றளிக்க வேண்டும்.

12. பதிவேடுகளைப் பார்வையிடுதல் மற்றும் அவற்றின் சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுதல்:- திருமணங்களைப் பதிவு செய்வதற்கான பதிவேடு, பொதுமக்கள் பார்வையிடுவதற்கு வைக்கப்பட வேண்டும் பதிவேட்டைப் பார்வையிட விரும்புகிற யாதொரு நபரும் இது தொடர்பாக விண்ணப்பம் ஒன்றை, பதிவாளரிடம் அளிப்பதன் பேரிலும் கீழேயுள்ள விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்துவதன் பேரிலும் அவ்வாறு பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும்.

விவர அட்டவணை

| | தேடப்படுகிற ஆவணத்தின் தன்மை | கட்டணம் |
|---|---|---|
| (i) | நடப்பாண்டு ஆவணத்தைத் தேடுதல் | ரூபாய்.15.00 |
| (ii) | ஏதேனும் முந்தைய ஆண்டு அல்லது முந்தைய ஆண்டுகளின் ஆவணத்தைத் தேடுதல் | ரூபாய். 5.00 (ரூபாய் 15–க்கு கூடுதலாக) |
| (iii) | திருமணம் பதிவு செய்யப்படவில்லை என்பது தொடர்பான சான்றிதழ் ஒன்றைப் பெறுவதற்கு | ரூபாய்.10.00 |

13. திருமணச் சான்றிதழ் புத்தகம்–:- (1) பதிவாளர், திருமணச் சான்றிதழ் புத்தகம் ஒன்றை வைத்துவர வேண்டும் அது இணைக்கப்பட்ட தொகுதியாக இருக்க வேண்டும், அதன் பக்கங்கள் தொடர்ச்சியாக இலக்கமிடப்பட வேண்டும் ஒவ்வொரு காலண்டர் ஆண்டிலும் வழங்கப்பட்ட ஒவ்வொரு திருமணச் சான்றிதழும் தொடர்ச்சியாக இலக்கமிடப்பட வேண்டும். மணமக்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் அதிகாரபூர்வமான ஒவ்வொரு நகலிலும் எண், சான்றிதழ் பதிவு செய்யப்பட்ட நாள், மாதம் மற்றும் ஆண்டு ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(2) திருமணப் பதிவுச் சான்றிதழ் புத்தகத்தில் செய்யப்பட்ட பதிவுகளின் நகல் ஒன்றினை, ஒவ்வோராண்டிலும், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அதாவது,

ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் முதல் தேதியன்று மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**14.** <u>மேற்பார்வை:-</u> தலைமைப் பதிவாளர் மற்றும் மாநில அரசின் பொதுவான மேற்பார்வையின் கீழ், பதிவாளர், அவருடைய அலுவல்களைப் புரிவார் மற்றும் அதிகாரங்களைச் செலுத்துவார்.

**15.** <u>சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதற்கான நடைமுறை:-</u>

திருமணப் பதிவுச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகலை அல்லது திருமணச் சான்றிதழின் நகல்களை அல்லது திருமணங்கள் பதிவேட்டின் பகுதி நகலைப் பெற விரும்புகிற யாதொரு நபரும், படிவம் VII இல் விண்ணப்பம் ஒன்றை அளிப்பதுடன், கீழேயுள்ள விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.

<u>விவர அட்டவணை</u>

| | இனம் | கட்டணம் |
|---|---|---|
| (அ) | திருமணப் பதிவுச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட ஒவ்வொரு நகலுக்கு (நகல் ஒன்றுக்கு) | Rs.10.00 |
| (ஆ) | திருமணங்கள் பதிவேட்டின் சான்றளிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதி நகலுக்கு (பக்கம் ஒன்றுக்கு) | Rs.10.00 |

**16.** <u>பதிவேடுகள், பதிவுருக்கள் முதலியவற்றைப் பாதுகாத்தல்:-</u> (1)பதிவாளர், மாவட்டப் பதிவாளர் ஆகியோர் வைத்து வருகிற திருமணங்கள் பதிவேடு மற்றும் திருமணங்களைப் பதிவு செய்வதற்கான குறிப்பாவணம் ஆகியவை நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

(2) கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுருக்கள், அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவு முடிவடைவதற்கு முன்னர் அழிக்கப்படக் கூடாது.

**விவர அட்டவணை**

| தொடர் எண். | பதிவுருக்களின் பெயர் | கால அளவு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | இரசீது புத்தகம் (சீட்டுகள்) | 5ஆண்டுகள் |
| 2. | பதிவேடுகளின் பகுதிநகலைப் பெறுவதற்கான விண்ணப்பம் | 5ஆண்டுகள் |
| 3. | ரொக்கப் புத்தகம் | 5ஆண்டுகள் |
| 4. | (1) துணைவிதியின் கீழ், மேற்சொன்ன இனங்களின் கீழ் வராத ஏனைய பதிவுருக்கள். | 2ஆண்டுகள் |

**இணைப்பு - II**

**குறிப்பாவணம்**

**படிவம்- I**

*(விதி 5(1)(a) காண்க)*

**2009ம் ஆண்டு தமிழ்நாடு திருமணப்பதிவுச் சட்டத்தின்கீழ் திருமணப்பதிவிற்கான குறிப்பாவணம்**

*("√ " எங்கெங்கு பொருந்துமோ)*

**1. கணவர் பற்றிய விவரங்கள்**

(அ) கணவரின் முழுப் பெயர் (பதிவுருக்களில் உள்ளவாறு)

(ஆ) மதம் — இந்து ☐ கிறித்தவம் ☐ இஸ்லாம் ☐ ஏனைய மதத்தினர் ☐

ஏனைய மதத்தினர் எனில் எதுவென்று குறிப்பிடுக

(இ) வயது மற்றும் பிறந்த நாள் — D D / M M / Y Y Y Y ஆண்டுகள்

(ஈ) திருமண நாளுக்குமுன் மணமுறைத் தகுதி — மணமாகாதவர் ☐ மணமானவர் ☐ விவாகரத் தானவர் ☐ மனைவியை இழந்தவர் ☐

ஏனையோர் ☐ ஏனையோரெனில் குறிப்பிடுக

திருமணமானவர் எனில் உயிருடன் இருக்கும் மனைவிகள் எண்ணிக்கை

(உ) தொழில்

(ஊ) இருப்பிட முகவரி

(எ) கடவுச்சீட்டு எண் (அடையாள ஆதாரம் தரப்பட வேண்டும்)

**1அ.** பெற்றோர்களின் விவரம் — **கணவரின் தந்தை**

(அ) முழுப் பெயர்

(ஆ)வயது — ஆண்டுகள் — வாழ்பவர்/இறந்தவர்

(இ) முகவரி (உயிருடனிருப்பின்)

**1ஆ.** பெற்றோர்களின் விவரம் — **கணவரின் தாய்**

(அ) முழுப் பெயர்

(ஆ) வயது — ஆண்டுகள் — வாழ்பவர்/இறந்தவர்

(இ) முகவரி (உயிருடனிருப்பின்)

## 2. மனைவி பற்றிய விவரங்கள்

(அ) மனைவியின் முழுப் பெயர் (பதிவுருக்களில் உள்ளவாறு)

(ஆ) மதம் — இந்து ☐ கிறித்தவர் ☐ இஸ்லாமியர் ☐ ஏனைய மதத்தினர் ☐

ஏனைய மதத்தினர் எனில் எதுவென்று குறிப்பிடுக

(இ) வயது (பிறந்த நாள்) D D / M M / Y Y Y Y ஆண்டுகள்

(ஈ) திருமண நாளுக்குமுன் மணமுறைத் தகுதி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மணமாகாதவர் | | மணமானவர் | | விவாகரத் தானவர் | | மனைவியை இழந்தவர் | |
| ஏனையோர் | | *ஏனையோரெனில் குறிப்பிடுக* | | | | | |

(உ) தொழில்

(ஊ) இருப்பிட முகவரி

(எ) கடவுச்சீட்டு எண் (அடையாள ஆதாரம் தரப்பட வேண்டும்)

**2அ.** பெற்றோர்களின் விவரம் — **மனைவியின் தந்தை**

(அ) முழுப் பெயர்

(ஆ) வயது ஆண்டுகள் வாழ்பவர்/இறந்தவர்

(இ) முகவரி (உயிருடனிருப்பின்)

**2ஆ.** பெற்றோர்களின் விவரம் — **மனைவியின் தாய்**

(அ) முழுப் பெயர்

(ஆ) வயது ஆண்டுகள் வாழ்தல்/இறத்தல்

(இ) முகவரி (உயிருடனிருப்பின்)

## 3. அயல்நாடு வாழ் இந்தியர் - கணவரின் கூடுதல் விவரங்கள்

i. (அ) கடவுச்சீட்டு எண்

(ஆ) யாரால் வழங்கப்பெற்றது

(இ) செல்லுபடியாகும் காலம் D D / M M / Y Y Y Y

ii. (அ) பதிவு செய்த போது எந்த நாட்டிற்கு பயண அனுமதி வழங்கப்பெற்றது

(ஆ) பயண அனுமதி செல்லுபடியாகும் காலம் D D / M M / Y Y Y Y

iii. (அ) வசிப்பிடத் தன்மை நிரந்தரம் / தற்காலிகம்

(ஆ) நிரந்தரமெனில், விவரம் தருக

iv. (அ) சமூகப் பாதுகாப்பு எண். (இருப்பின்)

## 4. அயல்நாடு வாழ் இந்தியர் - மனைவியின் கூடுதல் விவரங்கள்

i. (அ) கடவுச்சீட்டு எண்

(ஆ) யாரால் வழங்கப்பெற்றது

(இ) செல்லுபடியாகும் காலம் D D / M M / Y Y Y Y

ii. (அ) பதிவு செய்த போது எந்த நாட்டிற்கு பயண அனுமதி வழங்கப்பெற்றது

(ஆ) பயண அனுமதி செல்லுபடியாகும் காலம் D D / M M / Y Y Y Y

iii. (அ) வசிப்பிடத் தன்மை நிரந்தரம் / தற்காலிகம்

(ஆ) நிரந்தரமெனில், விவரம் தருக

iv. (அ) சமூகப் பாதுகாப்பு எண். (இருப்பின்)

## ஏனைய விவரங்கள்

5. திருமணத்தை நடத்தி வைத்த மதகுரு அல்லது உடனிருந்தவரின் பெயர் மற்றும் முகவரி

பிற விவரங்கள்

6. திருமணம் நடைபெற்ற இடம்/ அதாவது கிராமம்/ வட்டம்/ மாவட்டம் முழு முகவரியுடன்.

| | |
|---|---|
| தெரு | |
| கிராமம் | |
| வட்டம் | |
| மாவட்டம் | |

7. திருமணம் நடைபெற்ற நாள்

| D | D | / | M | M | / | Y | Y | Y | Y |
|---|---|---|---|---|---|---|---|---|---|

8. இத்திருமணம் அவரவர் மதம் சார்ந்த சட்டங்களின் கீழோ அல்லது வேறு சட்டங்களின் கீழோ முன்னரே பதிவு செய்யப் பெற்றுள்ளதா?

"ஆம்" எனில் விவரம் தருக: (திருமணப்பதிவுச் சான்றிதழ் / திருமணப் பதிவேட்டின் பகுதி நகல் இணைத்திடுக)

| |
|---|
| ஆம் / இல்லை |
| |

9. உறுதிமொழி:

(i) தமிழ்நாடு 2009ம் ஆண்டு திருமணப்பதிவுச் சட்டம் பிரிவு 3ன் கீழ் பதிவு செய்யும் தகுதிப் பெற்ற செல்லும் திறன்பெற்ற திருமணம் எங்களிடையே நடைபெற்றது;
(ii) அவரவர் மதம் சார்ந்த சட்டங்களில் திருமணம் நடத்தி வைக்க வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன;
(iii) இக்குறிப்பாவணத்தில் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் எங்களுக்கு தெரிந்தவரையிலும் நாங்கள் நம்புகிற வகையிலும் உண்மையானவை;
(iv) கீழே கையொப்பமிட்டுள்ள இரண்டு சாட்சிகள் திருமணம் நடைபெற்ற போது உடனிருந்தனர்; மற்றும்
(v) வரதட்சணை கேட்கப்படவோ, கொடுக்கப்படவோ, பெறப்படவோ இல்லை என்றும் நாங்கள் இதன்மூலம் உறுதி அளிக்கிறோம்.

| | | |
|---|---|---|
| கணவரின் புகைப்படம் | கணவரின் பெருவிரல் ரேகை | கணவரின் கையொப்பம் |
| மனைவியின் புகைப்படம் | மனைவியின் பெருவிரல் ரேகை | மனைவியின் கையொப்பம் |
| இடம் :<br>நாள் : | | மதகுரு அல்லது உடனிருந்தவரின் கையொப்பம் |

10. **சாட்சிகளின் பெயரும் முகவரியும்:**

| **வ. எண்.** | **பெயர்** | **தந்தை/ கணவர் பெயர் மற்றும் முகவரி** | **அடையாளம் குறித்த விவரங்கள்** | **கையொப்பம்** |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |

<u>படிவம்-II</u>

(விதி 5 துணை விதி 1(a) காண்க)

**<u>திருமணக் குறிப்பாவணத்தை கோப்பில் வைப்பதற்கான மனு</u>**

பெறுநர்:

திருமணப் பதிவாளர்,

-----------------------

பொருள்: திருமணப் பதிவு

ஐயா,

எங்களுக்கு ------------- தேதி --------------- ஊரில் திருமணம் நடைபெற்றது. எங்கள் திருமணத்தின் விவரங்களை திருமணப் பதிவேட்டில் இடம் பெறச் செய்து திருமண பதிவுச் சான்றிதழ் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நாங்கள் கீழ்க்காணுமாறு உறுதியளிக்கிறோம்:-

1. எங்களுக்கு 2009ம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச்சட்டம் பிரிவு-3ன் படி பதிவு செய்யத்தக்க செல்லுந்திறன் பெற்ற திருமணம் நடைபெற்றது.
2. அவரவர் மதம் சார்ந்த சட்டங்களில் காணப்பெறும் நிபந்தனைகள் நிறைவு செய்யப்பெற்றுள்ளன.
3. மனுவில் கொடுக்கப்பெற்ற விவரங்கள் எங்களுக்குத் தெரிந்தவரையிலும், நாங்கள் நம்புகிறவரையிலும் உண்மை என்றும் உறுதிகூறுகிறோம்.
4. முறையாக பூர்த்தி செய்யப்பெற்ற திருமணக் குறிப்பாவணம் இரு படிகளில, நிர்ணயிக்கப்பெற்ற கட்டணம் மற்றும் ஆவணங்களுடன் இத்துடன் இணைக்கப்பெற்றுள்ளது.

கையொப்பம் ----------------

(கணவன்)

-----------------

(மனைவி)

இடம்:

நாள்:

இணைப்பு:

1. திருமணக் குறிப்பாவணம்
2. நிர்ணயிக்கப்பெற்ற கட்டணம்
3. ஏனைய ஆவணங்கள்: (அ)----------------

(ஆ)----------------

(இ)----------------

மனு மற்றும் குறிப்பாவணங்களை பூர்த்தி செய்ய அறிவுரைகள்:-

1. குறிப்பாவணம் படியுடன் அளிக்கப்படல் வேண்டும்.
2. மணமக்களின் கடவுச் சீட்டளவு புகைப்படம் குறிப்பாவணத்திலும், மற்றொரு நகலிலும் ஒட்டப்பெற்றிருக்க வேண்டும்.
3. கீழ்கண்டவற்றை மெய்பிக்க, விதிகளில் குறிப்பிடப்பெற்ற ஆதாரம் ஏதேனும் ஒன்று அளிக்கப்படல் வேண்டும்.

   மணமக்களைப் பொறுத்து:-

   அ) பெயர்
   ஆ) வயது
   இ) இருப்பிடம்
   ஈ) திருமணப்பதிவு நாள் மற்றும் இடம்
   உ) மணமக்கள், சாட்சிகளை ஆகியோரின் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை.

4. போதிய அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட .சுய முகவரி எழதப்பெற்ற உறை.
5. குறிப்பாவணம் இனம் 1(ஈ)-ல் திருமண தகுதியை குறிப்படும்போது அவரவர் தனிச்சட்டத்தின்படியான தகுதியை குறிப்பிடல் வேண்டும்.
6. கட்டணம் ரொக்கமாகவோ/கேட்பு வரைவோலை மூலமாகவோ/பதிவாளரின் பெயரில் வரைவு செய்யப்பெற்ற வங்கி காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.

தமிழ்நாடு அரசு

படிவம்-III

**<u>திருமணப்பதிவு சான்றிதழ்</u>**

2009ம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச்சட்டம் (பிரிவு-5 உட்பிரிவு 7 காண்க)

எண்.------------------

| | |
|---|---|
| கணவரின் புகைப்படம் (கடவுச் சீட்டளவு) | மனைவியின் புகைப்படம் (கடவுச் சீட்டளவு) |

-------------------------ல் வசிக்கும் திரு. --------------------- அவர்களின் மகன் திரு.------------------------------------------------------------ என்பவரும் (கணவரின் பெயர்), -----------------------------------------------ல் வசிக்கும் திரு. -------------------- அவர்களின் மகள் திருமதி.--------------------------------------------- என்பவரும் (மனைவியின் பெயர்) தங்களுடைய திருமணம் ------------ தேதியில் ------------------------------------ ஊரில் நடைபெற்றதற்கான விவரங்களை அளித்ததின்பேரில், அது 2---- வருடம் --------- மாதம்----- நாள் தமிழ்நாடு 2009ம் ஆண்டு திருமணங்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் வைத்து வரப்படுகிற திருமணப்பதிவேட்டில் பதிவுச்செய்யப்பட்டதென சான்றளிக்கப்படுகிறது.

திருமணப் பதிவாளரின் கையொப்பம்

இடம் :

நாள் : (முத்திரை)

படிவம்-IV

(விதி 5(8) காண்க)

**திருமணப்பதிவு மறுப்பாணை**

எண்:----------

------------ என்கிற திருமணப் பதிவாளராகிய நான், தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாவணத்தையும் பிற ஆவணங்களையும் நுண்ணாய்வு செய்தும் தரப்பினரை விசாரித்தும். ------------------------------ ஆண்டு ---------- மாதம் ---------- நாளில் --------------க்கும் (கணவன்) -----------க்கும் (மனைவி) நடைப்பெற்றதாக கூறப்படும் திருமணத்தைக் கீழ்காணும் காரணங்களுக்காக பதிவுச் செய்ய மறுக்கிறேன்.

காரணங்கள்:---------------------------------------------------------------------------------
---------------------------------------------------------------------------------------------.

இடம் :

நாள் : திருமணப் பதிவாளரின் கையொப்பம்

முத்திரை

படிவம்-V

(11-ம் விதியின் (1)ஆம் துணை விதியைக் காண்க)

**<u>திருமணப்பதிவேடு</u>**

--------------ஆண்டிற்கான திருமணப்பதிவேடு

| வ எண் | திருமண நாளும், திருமணம் நடைப் பெற்ற இடமும் | கணவரின் பெயர் மற்றும் முகவரி | திருமணத் தின் போது அவரது வயது | கணவரின் மதம் | மனைவியின் பெயர் மற்றும் முகவரி | திருமணத்தின் போது அவரது வயது | மனைவியின் மதம் | பதிவு நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | | | | | | | | |

படிவம்-VI

(11-ம் விதியின் (1)ஆம் துணை விதியைக் காண்க)

**திருமணப்பதிவு மறுப்புப் பதிவேடு**

--------------ஆண்டிற்கான திருமணப்பதிவு மறுப்புப் பதிவேடு

| வ எண் | திருமண நாளும், திருமணம் நடைப் பெற்ற இடமும் | கணவரின் பெயர் மற்றும் முகவரி | திருமணத் தின் போது அவரது வயது | கணவரின் மதம் | மனைவியின் பெயர் மற்றும் முகவரி | திருமணத்தின் போது அவரது வயது | மனைவியின் மதம் | பதிவு மறுக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | | | | | | | | |

படிவம்-VII

(15-ஆம் விதியைக் காண்க)

**சான்றிட்ட நகல்/ சான்றளிக்கப்பட்ட பகுதி நகல் பெறவதற்கான விண்ணப்பம்**

அனுப்புநர்

(நபர்(கள்) பெயர் மற்றும் முகவரி)

பெறுநர்

திருமணப் பதிவாளர்,
-----------------------

பொருள்: சான்றிடப்பட்ட நகல்/ சான்றளிக்கப்பட்ட பகுதி நகல் கோருதல்.

அய்யா,

1. கீழே கையொப்பமிட்டுள்ள எனக்கு பின்வரும் ஆவணம் / ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல் / சான்றளிக்கப்பட்ட பகுதி நகலினை (------- (எண்ணிக்கையை குறிப்பிடவும்) இயன்றவரையில் விரைவில் அளிக்குமாறு உங்களிடம் கேட்டுககொள்கிறேன்.

*அ) திருமணப் பதிவு குறித்த சான்றிதழ் ஒன்று
*ஆ) திருமணப் பதிவு குறித்த பகுதி நகல்

2. திருமணம் குறித்த விவரங்கள்

அ) கணவர் பெயர்
ஆ) மனைவி பெயர்
இ) திருணம் பதிவு செய்யப்பட்ட நாள்
ஈ) திருமணப் பதிவு சான்றிதழின் எண் மற்றும் நாள்

3. இத்துடன் கட்டணம் ரூ.......... (எழுத்தால் ரூபாய் ......................................) இணைக்கப்பட்டுள்ளது.

தங்கள் உண்மையுள்ள,

கையொப்பம் ----------------

இடம்:
நாள்:
* தேவையில்லாதவற்றை அடித்துவிடவும்.